



ஞாயிறு, பிப் 22, 2026

பிரபல தமிழ்ப் பேச்சாளரும், தொலைக்காட்சி ஆளுமையுமான திரு. ராஜா அவர்கள், அமெரிக்காவில் வசிக்கும் ஒரு தமிழரின் சாதியை ஆராய்ந்து விசாரித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்நிகழ்வு அமெரிக்காவின் ஜார்ஜியா மாநிலத்திலுள்ள அட்லாண்டாவில், அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம் (GATS) ஏற்பாடு செய்த நிகழ்ச்சியின் பின்னணியில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. ராஜா அவர்கள் ஒரு காணொளி வெளியிட்டு, தான் அவரது பூர்வீகத்தைப் பற்றி மட்டுமே கேட்டதாகவும், சாதியைப் பற்றி அல்ல என்றும் கூறியுள்ளார். அக்காணொளியில், “நான் ‘செட்டிநாடா?’ எனக் கேட்டேன்; ‘செட்டியாரா?’ என அல்ல” என்று விளக்கம் அளித்துள்ளார். இது நேர்மையற்ற விளக்கம் என்று நாங்கள் கருதுகிறோம், ஏனெனில் பாதிக்கப்பட்ட பெண், தான் அதே பிராந்தியத்தைச் சேர்ந்த ஒரு பெரிய நகரத்தைப் பூர்வீகமாக கொண்டவர் என்று முன்பே தெரிவித்திருந்த நிலையில், “செட்டிநாடா?” என்று மீண்டும் கேட்க வேண்டிய தேவை எழவில்லை. மேலும், அந்த ‘பூர்வீகப் பெயர்’ குறிப்பிட்ட ஒரு சாதிப் பெயருடனும் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதை நம்மில் பலர் அறிந்திருக்கிறோம். திரு. ராஜா அவர்களின் சர்ச்சைக்குரிய சாதிய நடத்தையையும் அதற்கு அவர் அளித்த மழுப்பலான விளக்கத்தையும் AKSC கடுமையாக கண்டிக்கிறது.

பாதிக்கப்பட்டவருக்குத் தேவையான நிவாரணத்தீர்வு வழங்கவோ அல்லது எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகளைத் தடுக்க சீர்திருத்த நடவடிக்கைகளோ எடுப்பதற்குமாறாக, GATS இந்நிகழ்வை "தவறான புரிதல்" என்று விவரித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த எதிர்வினைக்கும் AKSC கண்டனம் தெரிவிக்கிறது, இத்தகைய அணுகுமுறை சாதிப் பாகுபாட்டால் பாதிக்கப்படுபவர்களுக்கு GATS ஒரு பாதுகாப்பற்ற இடமாக மாறும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடும்.

இந்நிகழ்வுகளை எதிர்கொண்ட நபரோடு நாங்கள் முழு ஒற்றுமையுணர்வோடு உடன்நிற்கிறோம். பிற்போக்குச் சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாத அவர்களின் மனஉறுதியைப் பாராட்டுகிறோம்.

இப்பிரச்சினை இந்திய சமூகங்களிடையே, குறிப்பாக தமிழர்களிடையே இதுவரை இல்லாத அளவுக்குப் பரவலான விவாதங்களைத் தூண்டியுள்ளது. எனவே, 2016 முதல் இத்தகைய பிரச்சினைகளில் செயல்பட்டு வரும், அமெரிக்காவைச் சார்ந்த சாதி எதிர்ப்பு அமைப்பாகிய நாங்கள், இந்த அறிக்கையில் நான்கு முக்கிய அம்சங்களை எடுத்துரைக்க விரும்புகிறோம். முதலாவதாக, இந்நிகழ்வை ஏன் எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று. இரண்டாவது, இந்நிகழ்வை ஏன் தனித்துப் பார்க்கக் கூடாது என்று. மூன்றாவது, சாதியச் சூழ்நிலைகளில், பாதிக்கப்பட்டவர்களையும், சம்பவத்தின்போது உடனிருப்போர்களையும் (bystanders) திறம்பட எதிர்வினையாற்ற எவ்வாறு தயார்படுத்த வேண்டுமென்றும். இறுதியாக, அமெரிக்காவிலுள்ள இந்தியர்களிடையே வலுவான சாதி எதிர்ப்பு உணர்வை எவ்வாறு உருவாக்கலாம் என்பதைக் குறித்தும் உரையாட விரும்புகிறோம்.

பலர் இத்தகைய கேள்விகளை கேட்பதும், பதிலளிப்பதும் சாதாரணமான ஒன்றாகவே உணரக்கூடும்; அதில் வருத்தப்பட வேண்டிய அவசியமே இல்லை என்றும் நினைக்கக்கூடும்.ஆனால், ‘இது சாதாரணம்’ என்பது ஆதிக்கச் சாதிநிலை வழங்கும் சலுகைகளை (உள்மனதிலிருந்து உணர்ந்தோ, உணராமலோ) வசதியாக அனுபவிப்பவர்களுக்கு மட்டுமே, என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சாதி என்பது பகுத்தறிவற்ற, சமத்துவமற்ற இறுகிய சமூகக்கட்டமைப்பு. இது சமூக-பொருளாதார நலனை மட்டுமல்ல, மனநலத்தையும் பாதிக்கிறது. சாதிய, பாலின வேறுபாடுகள் ஒத்திசைந்து இயங்கும்போது அதன் தாக்கம் மேலும் அதிகரிக்கிறது. சிலருக்கு சாதி என்பது சமூக மூலதனமாகவும் மேலோட்டமான பெருமையாகவும் விளங்குகிறது; அதே நேரத்தில், மற்றச் சிலரை சமூகத்திலிருந்து விலக்கி



வைப்பதற்கும், களங்கப்படுத்துவதற்கான காரணமாகவும் சாதி அமைகிறது. இந்த இரு நிலைகளையும் புரிந்து விழிப்புணர்வுடன் மறுக்கும் நிலைக்கு, அனைவரும் தயாராகி முன்வரும்போது மட்டுமே சாதியை உண்மையிலேயே அழித்தொழிக்க முடியும்.

இந்நிகழ்வை, அமெரிக்காவில் வசிக்கும் சில இந்தியர்களிடையே காணப்படும் பரந்த சாதிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே AKSC பார்க்கிறது. இந்த மனநிலை, இந்து மேலாதிக்கக் கொள்கைகளாலும், தளர்வாகவோ அல்லது முறையாகவோ கட்டமைக்கப்பட்ட சாதிய வலையமைப்புகளாலும் ஊக்குவிக்கப்பட்டு வலுப்பெறுகிறது. அமெரிக்காவில், சாதி அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்திர சந்திப்புகள் மற்றும் கூட்டங்களுக்கான வெளிப்படையான அழைப்புகள் வந்துள்ளன; பொது இணையதளங்களைக் கொண்ட சாதி அடையாள அடிப்படையிலான குழுக்கள்; சாதிப் பெயர்களின் கீழ் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இயங்கும் வணிக நிறுவனங்கள்; சாதிப்பெயர்களைக் கொண்ட கிரிக்கெட் அணிகள் என்று பல நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன. 2020-ம் ஆண்டில் வெளியுலகிற்கு வந்த சிஸ்கோ நிறுவன சாதிப்பாகுபாட்டு வழக்கைத் தொடர்ந்து, அமெரிக்காவில் சாதி எவ்வாறு செயல்படுகிறது, அது எப்படி வெளிப்படுகிறது என்பதை ஆவணப்படுத்தும் 100-க்கும் மேற்பட்ட சான்றுகளை (testimonies) AKSC சேகரித்துள்ளது.

இந்நிகழ்வும், அதனைத் தொடர்ந்து உருவான எதிர்வினைகளும், ஆழமாக வேரூன்றியுள்ள சமூக யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன.

வருந்தத்தக்க வகையில், இத்தகைய சம்பவங்கள் நிகழும் போது எவ்வாறு எதிர்வினையாற்ற வேண்டும் என்பது குறித்து நம்மில் பெரும்பாலோருக்குப் பயிற்சி இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கும் சம்பவத்தின்போது உடனிருப்போர்களுக்கும் அச்சூழ்நிலைகளைக் எதிர்கொள்வதற்குத் தேவையான விழிப்புணர்வும், உரிய பயிற்சியும், வலுவான ஆதரவு அமைப்புகளும் தேவைப்படுகிறது. மிக நீண்ட காலமாக, இத்தகைய சூழ்நிலைகளைக் கையாளத் தேவையான ஆதரவுக் கட்டமைப்புகள் நமக்கு இருந்ததில்லை. அதனால் பாதிக்கப்பட்டவருக்கு உருவாகும் தனிமை, இப்பாகுபாடு ஒரு சுழற்சியாய்த் தொடர வழிவகுத்துள்ளது. கூட்டுக்கற்றல் மற்றும் வெளிப்படையான விவாதங்கள் வழியேதான் இத்தகைய கற்றலும், முழுமையான விழிப்புணர்வும் சாத்தியமாகிறது. அதன்மூலமாகத்தான் இத்தகைய சூழல்களை ஒற்றுமையுணர்வுடன் கையாளுவதற்கான நம்பிக்கையும் உருவாகும்.சாதி அடிப்படையிலான சம்பவங்களைப் புகாரளிக்கவும், தேவையான ஆதரவைப் பெறவும் சாதி எதிர்ப்பு உதவித் தொலைபேசி இணைப்பை (helpline) AKSC இயக்கி வருகிறது.

சாதி என்பது ஒவ்வொரு தனிமனிதரையும் பாதிக்கக்கூடிய சமூகப் பிரச்சனை என்பதால், அதற்கு வலுவான அமைப்பு சார்ந்த கூட்டு எதிர்வினை இன்றியமையாததாகிறது. அமெரிக்காவில், பல தனிநபர்கள், முற்போக்குத் தளங்கள் மற்றும் கலாச்சார அமைப்புகள் சாதிப் பிரச்சினையில் மௌனம் காத்தே வந்துள்ளன, அல்லது "சாதிச்சார்பற்ற" நிலைப்பாட்டை எடுத்துள்ளன. அவர்களின் மௌனம், சாதிய ஆதிக்கவாதிகளைத் தொடர்ந்து ஊக்குவிக்கவே செய்கிறது. அதுமட்டுமின்றி, அவர்கள் வெளிப்படையான சாதிய வலையமைப்புகளால் தொடர்ந்து வலுப்பெறுகிறார்கள். எனவே, சாதிக்கு எதிரான மனநிலை கொண்ட நாம் அனைவரும், சாதியைத் திறம்பட எதிர்கொள்ளச் சாதி எதிர்ப்பு அமைப்புகள் ஏற்பாடு செய்யும் செயல்பாடுகளில் ஒருங்கிணைந்து பங்காற்றிட வேண்டும்.

AKSC என்பது சாதி வரம்புகளைக் கடந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சாதி எதிர்ப்பு அமைப்பு. நாங்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றோம். எங்களது நூல் வாசிப்பு மற்றும் கலந்துரையாடல் அமர்வுகள் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை, நேரடி மற்றும் இணைய (hybrid) வடிவில் நடைபெறுகின்றன. மேலும், டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், டாக்டர் அம்பேத்கர், மற்றும் தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்தநாள் நிறைவு விழாக்களையும்




கொண்டாடுகின்றோம். ஆண்டுதோறும் செப்டம்பர் மாத இறுதி அல்லது அக்டோபர் மாதத்தொடக்கத்தில், கலிஃபோர்னியாவின் வளைகுடாப் பகுதியில் எங்கள் வருடாந்திரக் கருத்தரங்கு மாநாட்டையும் நடத்தி வருகின்றோம். இந்நிகழ்ச்சிகள், ஒத்த சிந்தனை கொண்டோரை ஒருதளத்தில் சந்திக்கவும், வெளிப்படையான உரையாடல்கள் மற்றும் செயல்பாடுகள் வழியே வலுவான சாதி எதிர்ப்பு சமூகத்தைக் கட்டமைக்கவும் வழிவகுக்கின்றன.

நிறைவாக, தமிழர்களுக்கு 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்ட உயரிய தத்துவ மற்றும் கருத்தியல் பாரம்பரியம் உள்ளது. சாதியின் பெருந்தீய விளைவுகளுக்கு எதிராக உறுதியாக நின்று, ஒருங்கிணைந்து செயல்பட்டு அதனை வேரோடு அகற்றுவதன் வழி நமது பாரம்பரியத்தை மீட்டெடுக்க வேண்டும்.

அம்பேத்கர் கிங் படிப்பு வட்டம், அமெரிக்கா